AY

1619

25/07/24

**அரியலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் : திரு.ஆர்.இராமலிங்கம், பி.எஸ்ஸி.,**

ந.க. அ3/7321/2023, நாள்: 14.05.2024

வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் உடையார்பாளையம் 21-5 MAY 2024

பொருள்: பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி – ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுகள் – IV (தொகுதி – IV) (தேர்வு நடைபெற்ற நாள் 24.07.2022) – இளநிலை உதவியாளர் பதவிகளுக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் – அரியலூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியிடம் வழங்கப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண். 1803/PSD–D1/2023, நாள்: 30.08.2023.
2. அரியலூர் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் ந.க.அ3/7321/2023, நாள்: 22.09.2023.
3. அரியலூர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலரின் ந.க.எண்.பா1/5754367/2023, நாள்: 19.12.2023.
4. அரியலூர் சமூக பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியரின் ந.க.எண்.அ1/100/2023, நாள்: 27.12.2023.
5. உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியரின் ந.க.அ4/395/2022, நாள்: 26.12.2023.

******

**ஆணை**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம், 24.07.2022–அன்று நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வுகள் – IV (தொகுதி – IV) மூலம் இளநிலை உதவியாளர் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பார்வை 1–ல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடிதம் வாயிலாக அரியலூர் மாவட்ட வருவாய் அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 5 நபர்களுக்கு, பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின் படி, அரியலூர் மாவட்ட வருவாய் அலகில் இளநிலை வருவாய் ஆய்வாளர் பணியிடம் வழங்கப்பட்டு, தனியர்கள் கீழ்க்காணும் பட்டியலில் அவர்களுக்கெதிரே கலம் 3–ல் கண்டுள்ள நாளில் பணியேற்று பணிபுரிந்து வருகின்றனர்.

Scanned with OKEN Scanner

| வ. எண் | இளநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மற்றும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியேற்பு செய்த நாள் | பணியில் வரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] |
| 1 | இளவரசி சி,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம்,<br>அரியலூர். | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |
| 2 | கார்வண்ணன் ஆர்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,<br>உடையார்பாளையம். | 11.10.2023 முற்பகல் | 11.10.2023 முற்பகல் |
| 3 | முத்துராஜா என் ஆர்,<br>இளநிலை வருவாய் ஆய்வாளர்,<br>வட்டாட்சியர் (ச.பா.தி) அலுவலகம்,<br>அரியலூர். | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

மேற்காணும் நபர்களது பணியினை, தனியர்கள் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியேற்பு செய்த கலம் 03-ல் கண்டுள்ள நாளில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன் பிரிவு-26-ன்கீழ் வரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

தனியர்கள் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் மூன்றாண்டுகாலத் தொடர்பணியில் ஈராண்டுகால தகுதிகாண் பருவத்தினை திருப்திகரமாக முடிக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறார்கள்.

(ஒம்/-) ஆர்.இராமலிங்கம்
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(பொது) (மு.கூ.பொ),
அரியலூர்.

பெறுநர்
சம்பந்தப்பட்ட நபர்கள்.

நகல்: வருவாய் கோட்டாட்சியர், உடையார்பாளையம்.
நகல்: மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், அரியலூர்.
நகல்: வட்டாட்சியர் (ச.பா.தி) அரியலூர்.
உபரி நகல்: 'அ3' இருக்கை

/உத்தரவுப்படி/

14/8/24

அலுவலக மேலாளர் (பொது)

14/08/2024

Scanned with OKEN Scanner